JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC// 563/2024

: Prosecution P.W - 49

NAME : மூக்கம்மாள்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 09.09.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூப்பிடும் வேலைக்கு செல்வேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் தெரியும். அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது. அசா.4 செல்வராஜ் தெரியாது, அசா.5 ஜோசப்ராஜ் தெரியும், அசா.6 அருமைகிளி தெரியாது. அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி தெரியாது அசா.9 பூங்கொடி சூசை தெரியும், அசா.10 சீதாலெட்சுமி தெரியாது, அசா.11 ராமலெட்சுமி தெரியாது, அசா.12 பொன்பாண்டி தெரியாது, அசா.13 சாந்தி தெரியாது, அசா.14 குணசீலன் தெரியும், அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா ஆகியோர்களை தெரியாது அசா.19 குமரேசன் தெரியும் அசா.20 மணிராஜ் தெரியும், அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியும் அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது, அசா.27 தெய்வகனி தெரியும், அசா.28 செல்வன் தெரியாது, அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும். அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது, அசா.31 அன்னபூரணி தெரியும், அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும். அசா.33 முத்துக்கனியை தெரியும், அசா.34 வசுமதி தெரியாது, அசா.35 இருளப்பன் தெரியாது, அசா.36 முருகன் தெரியாது, அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா, அசா.47

ஞானப்பிரகாசம் ஆகியோர்களை தெரியாது . அ.சா.48 சேர்மக்கனியை தெரியும். கடந்த 12 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.60,000/-ம் சீட்டில் ஒரு சீட்டு சேர்ந்திருந்தேன். ரூ.11,750/-ம் கட்டியுள்ளேன். சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு மாயவன் கோயிலில் சென்று கட்டுவேன். நான் சீட்டு பணத்தை கொடுக்கும் போது நோட்டில் எழுதி கொள்வார்கள். 9 மாதங்களாக சீட்டு பிரிக்கவில்லை. எதிரிகள் ஊரில் இல்லை. பின்னர் எதிரிகள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விபட்டு மாயவன் கோவிலில் சென்று கேட்டோம். நீங்கள் கொடுத்த பணத்திற்கு எந்த அத்தாட்சியும் இல்லை என்றும் நோட்டை எரிச்சாச்சி என்றும் சொன்னார்கள்.

நம்பிக்கையின் பேரில் சீட்டு போட்டேன். நான் கட்டிய சீட்டு பணம் தற்போது வரை கொடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்க மாயகிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

7 குழுக்களாக சீட்டு நடத்தியதாக சொல்லும் நிலையில் எத்தனை ரூபாய் சீட்டுக்கள் நடத்தினார்கள் என்றால் தெரியாது. பூங்கொடி சூசையின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பூங்கொடி சூசைக்கு எந்த ஊர் என்றால் சீட்டு கட்டும் இடத்தில் வைத்து தான் பார்ப்போம். எந்த ஊர் என்று தெரியாது. ரூ.60000 சீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் சேர்ந்திருந்தார்கள் என்றால் தெரியாது. நான் ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு பணம் கட்டுவேன் என்பதை எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். எழுதி வைத்துள்ளதை பார்த்து தான் ரூ.11750 செலுத்தியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் எழுதி வைத்த சீட்டை புகார் கொடுக்கும் போது கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. முதல் வாரம் ரூ.600 கட்டி உள்ளேன். 3 வது வாரம் ரூ.500 கட்டி உள்ளேன். மற்ற வாரங்களில் ரூ.500 கட்டி உள்ளேன். மாயகிருஷ்ணன் அப்பா பெயர் தெரியாது. 9 மாதம் தலைமறைவாக இருந்தது எந்த வருடம் என்றால் தெரியாது. எந்த வருடம் திரும்பி வந்தார்கள் என்றால் தெரியாது. இன்றிலிருந்து 15 வருடங்களுக்கு முன்பு இருந்தே சீட்டு போட்டுள்ளேன். எதிரிகளில் ஒருவர் பெயர் துரை, அவரது அப்பா பெயர் குத்தாலிங்க நாடார். மற்றொரு எதிரி பெயர் தெரியாது. மற்றொரு எதிரியின் தகப்பனார் பெயர் அண்ணாதுரை. எதிரிகள் இருவரும் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் ஒருவர் ஆசிரியர். மற்றொருவர் வீட்டில் உள்ள வேலைகளை செய்வார். அங்கு அமர்ந்திருப்பவர்களில் யார் வாத்தியார் என்றால் மேற்கே இருப்பவர் (1 வது எதிரி) வாத்தியார். எந்த ஊரில் வாத்தியாராக உள்ளார் என்றால் தெரியாது.

இருவரும் கோவிலின் வரிதாரர்கள். மகேஷ் மாயவன் கோவிலின் வரிதாரர் என்றால் சரிதான். மகேஷ் மாயவனுக்கும், எதிரிகளுக்கும் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது. மகேஷ் மாயவன் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் வந்துள்ளார். நோட்டை எரித்தாச்சி என எப்போது சொன்னார்கள் என்றால் சாங்காலம் சென்று கேட்கும் போது சொன்னார்கள். நான் காவல்நிலையம் சென்றேன். புகாரில் நான் கையெழுத்து போடவில்லை. புகாரை படித்து காண்பிக்கவில்லை. புகாரில் யார் கையெழுத்து போட்டுள்ளர்கள் என்ற விவரம் தெரியாது. மாயவன் கோவிலில் ரொம்ப காலமாக கோவிலின் நன்மைக்கு சீட்டு நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

கோவிலின் வரிதாரர்கள் தான் சீட்டை நடத்துவார்கள் என்றால் சரிதான். ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கு பிறகு வரிதாரர்கள் சீட்டு பணம் நடத்தி பிறகு அடுத்து வரும் வரிதாரர்கள் சீட்டு நடத்துவார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது

போல் இந்த எதிரி எவ்வித சீட்டு பணமும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் அவர்களிடம் சீட்டு போட்டிருப்பது கிடையாது என்றாலும் மகேஷ் மாயவனின் ஏற்பாட்டின் பேரில் கொடுக்கபட்ட பொய் புகாரின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் தான் போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சுமார் 50 பேர் சென்றிருப்போமா என்றால் சென்றிருப்போம். அனைவரையும் மொத்தமாக விசாரித்தார்கள் என்றாலும் தனித்தனியாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். ரூ. 60000 சீட்டு பணத்தில் மொத்தம் 30 வாரம் கட்டி உள்ளேன். ரூ.60000 சீட்டு எப்போது ஆரம்பித்தது என்றால் தெரியாது. நான் ஏலத்திற்கு செல்லமாட்டேன் என்றால் சரிதான். சீட்டு பணம் நான் தான் கட்ட செல்வேன். ஏலம் கேட்ட ஆட்களுக்கு கோவிலில் வைத்து சீட்டு பணத்தை கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே சீட்டு எடுத்தவர்களும் ஏலம் நின்று விட்டதால் சீட்டு பணத்தை கட்டவில்லை என்றால் சரிதான். ஏலக்கழிவு தொகையை உடனே கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ரூ.60000 சீட்டில் மொத்தம் எத்தனை சீட்டு என்றால் தெரியாது. ரூ.11750 என எதை பார்த்து சொன்னேன் என்றால் நான் எழுதி வைத்துள்ளேன். போலிஸார் அதை வாங்கி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது மாதிரி எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

(1வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 48 |
| NAME | : | சேர்மக்கனி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 09.09.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான்பீடிசுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் சீட்டு பிரிப்பார்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் தெரியும். அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது. அசா.4 செல்வராஜ் தெரியும் அசா.5 ஜோசப்ராஜ் தெரியும் அசா.6 அருமைகிளி தெரியாது. அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி தெரியாது அசா.9 பூங்கொடி சூசை தெரியாது அசா.10 சீதாலெட்சுமி தெரியாது அசா.11 ராமலெட்சுமி தெரியாது அசா.12 பொன்பாண்டி அசா.13 சாந்தி அசா.14 குணசீலன் அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா ஆகியோர்களை தெரியாது அசா.19 குமரேசன் தெரியும் அசா.20 மணிராஜ் தெரியாது. அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியும் அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியும் அசா.27 தெய்வகனி தெரியாது அசா.28 செல்வன் தெரியும் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது. அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியும் அசா.31 அன்னபூரணி தெரியாது அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியாது அசா.33 முத்துக்கனியை தெரியாது அசா.34 வசுமதி தெரியும் அசா.35 இருளப்பன் தெரியும் அசா.36 முருகன் அசா.37 கெலின்

ஞானபிரகாசம் அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி தெரியும் அசா.46 சகுந்தலா, அசா.47 ஞானப்பிரகாசம் ஆகியோர்களை தெரியாது

10,15 வருடங்களுக்கு முன்பு எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். 5–6 பிரிவாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.60000 சீட்டில் 2 சீட்டுக்கள் சேர்ந்திருந்தேன். மொத்தம் ரூ.23,480 பணம் கட்டி இருந்தேன்.சீட்டு பணத்தை வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு மாயவன் கோவிலிற்கு சென்று கட்டுவேன். சீட்டு பணத்தை நோட்டில் வரவு வைத்து கொண்டு வாங்கி கொள்வார்கள். பின்னர் 9 மாதங்களாக சீட்டு பணத்தை வாங்க வரவில்லை. ஊரை விட்டு போய் விட்டார்கள். பின்னர் 9 மாதங்கள் கழித்து திரும்ப வந்தார்கள். மாயவன் கோவிலில் வைத்து நிறைய நபர்கள் சென்று எதிரிகளிடம் கேட்டோம். அதற்கு எதிரிகள் சீட்டு போட்டதற்கு என்ன அத்தாட்சி உள்ளதென்றும் அதை எல்லாம் எரித்து விட்டதாகவும் கூறினார்கள். எதிரி வாத்தியார் என்பதால் பீடி சுற்றும் காசை சேர்க்க வேண்டி எதிரிகளிடம் சீட்டு போட்டேன். தற்போது வரை என் சீட்டு பணத்தை எனக்கு தரவில்லை.கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுக்க சென்றார். நாங்களும் வருகிறோம் என உடன் சென்றோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

மாயவன் அப்பா பெயர் தெரியாது. மாயவநாதன் அப்பா பெயர் தெரியாது. எந்த பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருக்கிறார் என்று தெரியாது. கிருஷ்ணன் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அந்தோணிராஜ், குணசேகரன் ஆகியோர்களின் தகப்பனார் பெயர் தெரியாது. சுதாவின் கணவர் பெயர் செல்வராஜ், வெய்க்காலிபட்டி. இருளப்பன் தகப்பனார் பெயர் ஆறுமுகம். பவளக்கொடி கணவர் பெயர் ராகவன். புகார் கொடுத்த அன்றே போலிஸ் விசாரித்தார்கள். எந்த தேதி என்று தெரியாது. புகார் கொடுக்க நான் சென்றேன். புகாரை படித்து காண்பிக்கவில்லை. புகாரில் என்ன எழுதி உள்ளது என தெரியாது. புகாரில் நான் கையெழுத்து போடவில்லை. புகாரில் யாரெல்லாம் கையெழுத்து போட்டுள்ளார்கள் என தெரியாது. காவல்நிலையத்திற்கு மாலை 6 மணிக்கு சென்றேன். இரண்டு சீட்டில் 38 வாரம் கட்டினேன். ரூ.60000 சீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் என்று தெரியாது. ஒவ்வொரு வாரமும் ஒரு சீட்டிற்கு எவ்வுளவு கட்டினேன் என்றால் ரூ.500 சீட்டிற்கு ரூ.120 கழித்து விட்டு மீதி தொகை கட்டுவேன். ஒவ்வொரு வாரமும் கழிவு மாறுபடும் கழிவுத் தொகையை கழித்து மீதி தொகையை கட்டுவேன்.

கழிவு போக எத்தனை வாரம் பணம் செலுத்தி உள்ளேன் என நான் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை போலிஸாரிடம் கொடுத்தேன் என்றால் கொடுத்தேன். சாட்சி சொல்ல நான் நீதிமன்றத்திற்கு வரும் போது என்னுடன் மகேஷ் மாயவன் வந்தார் என்றால் சரிதான். நான் எவ்வுளவு ரூபாய் பணம் கட்டி உள்ளேன் என்பதை ஒரு பேப்பரில் எழுதி வைத்து

மகேஷ் மாயவன் சொல்லி தந்தாரா என்றால் அவரும் சொல்லி தந்தார், என் மருமகளும் சொல்லி தந்தார். மகேஷ் மாயவன் கடையம் ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவராகவும், கடையம் ஒன்றிய செயலாளராகவும் திமுகவில் உள்ளார் என்றால் சரிதான்.

காவல்நிலையைத்திற்கு என்னுடன் யாரெல்லாம் வந்தார் என்றால் நிறைய நபர்கள் வந்தார்கள். சுதா, செல்வம், பவளக்கொடி, அந்தோணி ராஜ், மாயவன் ஆகியோரும் வந்தார்கள். நான் காவல்நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரம் இருந்திருப்போம். 9 மாதம் கோவிலில் சீட்டு பிரிக்கவில்லை என்பது குறித்து ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. கோவிலில் இன்று வரை சீட்டு வரவு செலவு நடந்து வருகிறது என்றால் சரிதான். சீட்டு நடத்துவது கோவிலின் நன்மைக்காக தான் என்றால் சரிதான். நான் இந்த சீட்டிற்கு முன்பாக சீட்டு போட்டுள்ளேன். நான் போட்டுள்ள ரூ.60000 சீட்டில் நிறைய நபர்கள் சீட்டு எடுத்துள்ளார்கள். சீட்டு எடுத்தவர்கள் பணத்தை வாங்கி கொண்டார்கள். நான் சொல்வது போல் இந்த எதிரி எவ்வித சீட்டு பணமும் கோவில் சார்பாக நடத்தியது கிடையாது என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் இந்த எதிரி தலைமறைவாக இருந்தது கிடையாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு எதிரியிடம் சென்று பணம் கேட்டேன் என்றால் சாயங்காலம் போய் கேட்டோம். மாயவன் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக மகேஷ் மாயவன் தரப்பிற்கும், எதிரி தரப்பிற்கும் பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது.

இரு தரப்பினருக்கும் பிரச்சினை உள்ளது என்பதால் தான் மகேஷ் மாயவன் என்பவர் தரப்பில் இருந்து எதிரியை பழி வாங்க வேண்டும் என்பதற்காக எவ்வித சீட்டு பணமும் நடத்தாத எதிரி மீது மகேஷ் மாயவன் துண்டுதலின் பேரில் கொடுக்கபட்ட பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் எந்த சூழ்நிலையிலும் சீட்டு பணம் கேட்டிருப்பது கிடையாது என்றாலும் சீட்டு பணம் நடத்தாத எதிரி ஆவணங்களை அழித்து விட்டதாக கூறியது கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். போலிஸ் எங்களை தனித்தனியாக விசாரிக்காமல் மொத்தமாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். ரூ.60000 சீட்டிற்கு வாரம் ரூ.500 கட்ட வேண்டும் என்றால் சரிதான். இரண்டாவது சீட்டில் மாயவன் கோவிலுக்கு என்றால் கரசான் சீட்டு என்று சொல்வார்கள். ஏலம் கேட்கும் நபர்களுக்கு ஏலம் கேட்ட அன்றே கோவிலில் வைத்து பணத்தை கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுப்பதற்கு முன்பு ரூ.500 யை கழிவு இல்லாமல் செலுத்திவிட்டு ஏலம் எடுத்த பின்பு கழிவுத் தொகையை தந்து விடுவார்கள் என்றால் சரிதான். ரூ.60000 சீட்டு எந்த தேதியில் ஆரம்பித்தது என்றால் தெரியாது. 38 வாரமும் வேறு வேறு நபர்கள்

சீட்டு பணத்தை எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுக்க கோவிலில் வைத்து பணத்தை கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். 38 வாரம் சீட்டு பணம் எடுத்தவர்களும் தற்போது கட்டவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது மாதிரி எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi